[2018 ஜனவரி 10

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

7. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜே1) துறையின் 28–7–2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 107–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

8. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிற்கு திருத்தம் செய்தது குறித்து 30–8–2017 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./மி.ப.வி/8–23–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

9. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

10. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

11. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

–ஏதுமில்லை–